Seniority Lists

* 79. *Q.*—Thiru K. ARUNACHALAM (on behalf of Thiru D. Santosham): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that District-wise seniority lists for Secondary Grade Teachers in Government High Schools are being maintained, while State-wise seniority lists are being maintained for Graduate Teachers working in Government High Schools; and

(*b*) if so, whether a uniform procedure will be adopted for both categories?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) இடைநிலை ஆசிரியர்களின் நியமன அதிகாரம் முதன்மைக் கல்வி அலுவலர் மாவட்டக் கல்வி அலுவலர் ஆகியவரிடம் மாவட்ட அளவில் உள்ளதால், அவர்களின் பணிமூப்புப் பட்டியல் மாவட்ட அளவிலும், பட்டதாரி ஆசிரியர்கள், மாநில அளவில் தமிழ் நாடு தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பள்ளிக் கல்வி இணை இயக்குநரால் நியமனம் செய்யப் படுவதால் அவர்களின் பணிமூப்புப் பட்டியல் மாநில அளவிலும் பராமரிக்கப் படவேண்டும். எனவே, இவ்விருவகைப் பணியாளர்களுக்கும் ஒரே மாதிரியாகப் பணியாளர் பணிமூப்புப் பட்டியல் பராமரிக்கும் பிரச்சினைக்கு இடமில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினா எண் 80 ஒத்திவைக்கப்படுகிறது.

Additional Town Bus between Vellore and Reddipalayam.

* 81. *Q.*—Thiru K. ARUNACHALAM (on behalf of Thiru C. R. Lakshmikandhan): Will the Hon. the Minister for Transport be pleased to state, with reference to the answer given to the Legislative Council Question No. 142, on 9th March 1983 on the floor of the Council, the stage at which the plying of an additional Town Bus by the Pattukkottai Alagiri Transport Corporation (bifurcated from Thanthai Periyar Transport Corporation) between Vellore and Reddipalayam in Route No. **11, now stands?**

1984 மார்ச் 9]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : வேலூர்-ரெட்டிபாளையம் தடத்தில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் தற்போது ஒரு பேருந்தை இயக்கி வருகிறது. வேலூர்-ரெட்டிபாளையத்திற்கு இடையே உள்ள கிராமங்களுக்கு இதனால் போதுமான பேருந்து வசதி கிடைப்பதாலும், கூடுதல் பேருந்து இயக்குவதற்கான பயணிகளின் விகிதம் இத்தடத்தில் இல்லாததாலும், இத்தடத்தில் தற்போது கூடுதல் பேருந்து இயக்குவதற்கான கருத்துரு ஏதும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திடம் இல்லை.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 6—3—1984 அன்று ஒத்திப் போடப்பட்ட வினாக்கள் தற்போது எடுத்துக்கொள்ளப்படும்.

வேலூரில் தமிழ் நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் துவக்குதல்

*** 59 வினா.—திரு. க. அருணாசலம் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூரில், தமிழ் நாடு தோல் கார்ப்பரேஷன் துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) மற்றும் (இ) தமிழ் நாட்டில் தோல் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்க, தமிழ் நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் ஒன்றை அரசு நிறுவியுள்ளது. சென்னையில் பதிவு அலுவலகம் கொண்ட இந்நிறுவனம் அண்மையில் செயல்படத் துவங்கியுள்ளது.

மண்டல கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையம்

*** 60 வினா.—திரு. க. அருணாசலம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பிள்ளையார்பட்டியில் மண்டல கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?